# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# 29.07.2022 ம் தேதி நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்
# தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுன் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். 197**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். 198**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஜுன் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். 199**

4. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஜுன் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .
**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண். 200**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கான 2021–2022 ஆம் ஆண்டிற்கான கேட்பு வசூல் மற்றும் நிலுவை பதிவேடுகள் (Demand Register) வார்டு வாரியாக தனித்தனியாக பிரிண்ட் செய்து பைண்டிங் செய்யும் பணிக்கு உத்தேச செலவினம் ரூ.5000/– (ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1107/2021/இ2)
**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதி வழுங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 201**

6. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தலை தடுத்தல், திடக்கழிவுகளின் உற்பத்தியினை குறைத்திடுதல், கழிவுகளை மறுசுழற்சி செய்தல் மற்றும் மீண்டும் பயன்படுத்துதல், கழிவுகளை உற்பத்தியாகும் இடத்திலேயே உரம் தயார் செய்தல் போன்றவைகள் குறித்து இந்நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 681/2022/பி1 நாள். 12.05.2022 இன் படி M/s. Southern Solid Waste Management Service, No. 12/182, Appattuvillai, Kottamavu, Mulagumoodu (Po), Kanyakumari (Dt)அவர்களுக்கு உத்திரவிடப்பட்டு அந்நிறுவனம் வழங்கும் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களை கொண்டு 12.05.2022 முதல் 48 மாதங்களுக்கு இந்நகராட்சிக்கு 7 பரப்புரையாளர்கள் மற்றும் 2 மேற்பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட்டு விழிப்புணர்வு பணி மேற்கொள்ளுமாறும் உத்திரவிடப்பட்டுள்ளது.

பணியில் ஈடுபடுத்தப்படும் பணியாளர்களுக்கு கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | பரப்புரையாளர் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மற்றும் சேவை கட்டணம் | ரூ. 16,817/- Inclusive of ESIC ,EPF and all statutory/taxation liabilities as applicable |
| 2 | மேற்பார்வையாளர் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மற்றும் சேவை கட்டணம் | ரூ. 21,118/- Inclusive of ESIC ,EPF and all statutory/taxation liabilities as applicable |

எனவே, மேற்படி நிறுவனத்தினர் மூலம் பரப்புரையாளர்கள் 7 நபர்கள், மேற்பார்வையாளர் 2 நபர்கள் என்னும் அடிப்படையில் அந்நிறுவனத்திடம் இருந்து தினமும் 30.06.2022 முதல் பெற்று இந்நகராட்சியில் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ஒவ்வொரு மாதமும் மனித ஆற்றல் வழங்கும் நிறுவனமான M/s. Southern Solid Waste Management Service, No. 12/182, Appattuvillai, Kottamavu, Mulagumoodu (Po), Kanyakumari (Dt) அவர்களுக்கு இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து பட்டியல் தொகையினை விடுவிக்கவும், SBM திட்ட நிதியில் தொகை இல்லாத காலங்களில் பொது நிதியிலிருந்து தொகையினை நகராட்சி நிதிநிலைக்கேற்ப (Financial Circumstances) வழங்கிடவும், பின்னர் SBM திட்ட நிதியிலிருந்து தொகை பெற்ற பின்வு பொது நிதிக்கு சரி கட்டி கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2475/2020/எச்1)

**அலுவலக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 30.06.2022 முதல் பணியாளர்களை ஒப்பந்த நிறுவனத்திடமிருந்து பெற்று பணி மேற்கொண்டு வருவதை மன்றம் ஏற்கலாம்.

**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 202**

7. இந்நகராட்சியின் அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள CCTV கேமரா உபகரணங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது. அதனை சரி செய்து இயக்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.11,000/- (ரூபாய் பதினொறாயிரம் ஆகும்). அலுவலக பாதுகாப்பு அவசியம் கருதி பணியினை உடன் செய்யவும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 203**

8. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு B, பிளாக்-23, நகரளவை எண்.63/30 இல் 1300 சதுர மீட்டர் (0.32 ¼ ஏக்கர்) (கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.5 இல் அமைகிறது) பரப்பு மனையிடத்தில் 4 (நான்கு) குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.649/2022/ஈமா2 நாள்.16.06.2022 இல் ம.வ./ஈ.மா எண்.197/2022 என எண்ணிடப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தில் அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 இல் விதி எண்.41(4) இன் படி பூங்காவிற்கு என ஒதுக்கீடு செய்யப்பட்ட பொது ஒதுக்கீடு (10.78 %) 140 சதுர மீட்டருக்கு அரசு வழிகாட்டி மதிப்பு தொகை ரூ.3,05,000/-

திரு.எம்.ஆறுமுகம் என்பவரால் அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், மூலை முடக்கு 1.125 சதுர மீட்டர் பரப்பு இடத்தினை திரு.எம்.ஆறுமுகம் என்பவர் நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் மூலம் கோபிசெட்டிபாளையம் சார் இணை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து ஒப்படைக்கப்பட வேண்டும். மேற்கண்டவாறு மேற்படி பதிவு செய்து பத்திரம் பெறப்பட்ட பின்னர் உரிய ஆவணங்களை பரிசீலனை செய்து நகர்மன்றத்திற்கு மீள பொருள் வைத்து இறுதி உத்திரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1432/2022/எப்1)

**அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.**
**அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண். 204**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட லக்கம்பட்டி கிராமம் வார்டு B, பிளாக் – 1, நகரளவை எண்.7 இல் 0.79 ½ ஏக்கர் பரப்பில் அமையும் மனைப்பிரிவின் உத்தேச சாலைகள் பரப்பு மற்றும் பொது உபயோகம் பரப்பு ஆவியவற்றினை உள்ளாட்சிக்கும் TANGEDCO விற்கு உரிய இடத்தினை மின் வாரியத்திற்கு அல்லது உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யுமாறும், ஒப்படைப்பு செய்யப்பட்ட தானப்பத்திரத்தின் அசலினை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்கள் கடிதம்ந.க.எண்.203/2022/ஈமா2 நாள்.18.04.2022 இல் திரு.K.S. ஜெகதீசன் மனுதாரருக்கு முகவரியிட்டு இவ்வலுவலகத்திற்கு நகலிடப்பட்டு வரப்பெற்றுள்ளது.

மேற்படி உத்தேச மனைப்பிரிவு இடமானது புலத்தணிக்கை செய்யப்பட்டதில் கோபிசெட்டிபாளையம் 1–எண் இணை சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவண எண்.2271/2020 நாள்.31.08.2020 இன் படி 0.3219.0 ஹெக்டேர்ஸ் புஞ்சை பூமியானது திரு.சண்முகம் மகன் திரு.K.S. ஜெகதீசன் மற்றும் வெங்கிடுசாமி மகன் திரு.பி.வி.செந்தில்குமார் ஆகியோருக்கு பாத்தியப்பட்டதாகும். இப்பூமியின் வடக்கு மற்றும் தெற்கில் விவசாயமல்லாத பூமியாக உள்ளது. இப்பூமியின் இடையே நீர்வழித்தடம் மற்றும் கொப்பு போன்ற இனங்கள் ஏதும் செல்லவில்லை. இப்புலத்திற்கு கிழபுறம் T.S.No.28இல் 25 அடி அகல தென்வடல் இணைப்பு சாலை செல்கிறது. புலத்திற்கு மேற்குப்புறத்தில் T.S.No.3 இல் கிளை வாய்க்கால் செல்கிறது. இக்கிளை வாய்க்காலின் நீரானது இப்புலத்திற்கு பாசன வசதி அளிப்பதில்லை. மனுதாரரின் பூமியானது விவசாய பயிரினங்கள் ஏதுமின்றி தரிசு நிலமாக உள்ளது. மேலும், வடபுறத்தில் தற்போது உபயோகத்தில் இல்லாத சுவாமி விவேகானந்தா ITI கட்டிடமும் தென்புறத்தில் குடியிருப்பு வீடுகளும் உள்ளது.

மேற்படி உத்தேச மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கும் நிலையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களின் உத்தேச மனைப்பிரிவின் சாலை அமைப்பு வரைபடத்தில் கண்டுள்ளவாறு சாலை மூலைமுடக்கு, சாலை மற்றும் பொது உபயோக பரப்பினை நகராட்சிக்கு கீழ்காணும் விபரப்படி திரு.K.S. ஜெகதீசன் நெ.1 இணை சார் பதிவாளர் அலுவலகம், கோபிசெட்டிபாளையத்தில் தானப்பத்திரம் மூலம் பதிவு செய்து தானமாக நகராட்சிக்கு ஒப்படைக்கவும், ஒப்படைப்பு செய்த பின்னர் தொழில்நுட்ப அனுதி வேண்டி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு கடிதம் அனுப்பவும் மன்றத்தின் அனுமதிக்காக சமர்பிக்கப்படுகிறது. (ந.க.எண். 1088 /2022/எப்1)

1. சாலை மற்றும் மூலைமுடக்கு – 954.50 + 2.25 = 956.75 சதுர மீட்டர்
2. பொது உபயோகம் A = 20.61 சதுர மீட்டர்
3. பொது உபயோகம் B = 21.18 சதுர மீட்டர்

**அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.**
**ஒத்திவைக்கப்பட்டது , மன்றத்தீர்மான எண். 205**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம், வார்டு D, பிளாக் – 20, நகரளவை எண். 9/1, 9/2, 10/1, 10/2, 23, 24/1, 24/2, 25/1 மற்றும் 25/2, சர்வே எண். 244பி, 247/1 மற்றும் 247/3 இல் உள்ள 385 செண்ட் (3.85 ஏக்கர்) காலியிடத்தினை முழுமைத்திட்டத்தில் விவசாய பகுதியாக உள்ளதை குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து தருமாறு 19.08.2020 ஆம் நாளிட்ட வி.கே. குமரேசன் மற்றும் 4 நபர்களால் கோரப்பட்டது. மேற்காணும் விண்ணப்பத்துடன் வரப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையில் 30.09.2020 ஆம் நாளிட்ட நகரமைப்பு ஆய்வர் ஆய்வுக்குறிப்பின் படியும், மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உபயோக மாற்றம் தொடர்பான கருத்துருக்கள் மற்றும் ஆவணங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசு செயலர், சென்னை அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பிட நகர்மன்ற தீர்மானம் எண். 92 நாள். 10.09.2020 இல் நகர்மன்றத்தால் அனுமதி அளிக்கப்பட்டது.

மேற்காணும் நகர்மன்றத்தின் ஒப்புதலின் பேரில் மேற்காணும் கருத்துருவை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு, மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் வழியாக வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசு செயலர் அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 1886/2020/எப் 1 நாள். 30.09.2020 இல் கருத்துரு அனுப்பப்பட்டது. இதனை அடுத்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்கள் கடிதம் ந.க.எண். 1668/2020/ஈம2 நாள். 19.10.2020 இல் நில உபயோக மாற்றம் குறித்து பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனை பெறும் பொருட்டு தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில் உள்ளூர் திட்ட குழுமத்தால் பிரசுரம் செய்த விவரத்தையும், மேற்படி செய்தி தாள் வெளியிடப்பட்டு 30 நாட்கள் முடிவுற்ற பின்னர் நிறைவேற்றப்பட்ட நகராட்சி தீர்மானத்தை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்படி நில உபயோக மாற்றம் தொடர்பாக பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனையை 30 நாட்களுக்குள் எழுத்து பூர்வமாக தெரிவிக்க கோரி 12.11.2020 ஆம் நாளில் AFTERNOON ஆங்கில நாளிதழ் மற்றும் மாலைமுரசு தமிழ் நாளிதலில் விளம்பரம் வெளியிடப்பட்டது. மேற்கண்டவாறு விளம்பரபடுத்தப்பட்ட 30 நாட்களுக்குள் பொது மக்களிடமிருந்து எவ்வித ஆலோசனையோ மற்றும் ஆட்சேபனையோ ஏதும் பெறப்படவில்லை. எனவே, 30.09.2020 இல் நிலஉபயோக மாற்றம் தொடர்பான கருத்துருவினை வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அரசு செயலர் அவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1886/2020/எப்1 நாள்.31.12.2020 இல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு உரிய ஆவணங்களுடன் கருத்துரு அனுப்பப்பட்டது.

நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2055/2021/டிசிபி4 நாள்.07.10.2021 இல் பிரஸ்தாப இடமானது கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 இல் அமைவது அறியப்பட்டது. முழுமைத்திட்டமானது 1998 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.விரிவு அபிவிருத்தி திட்டமானது 2000 இல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி விரிவு அபிவிருத்தி திட்டம் தான் சமீபித்திய திட்டமாகும். TNCDBR 2019 விதி 16(3) ன் படி பிரஸ்தாப திட்டமானது திட்ட மாற்றம் விரிவு அபிவிருத்தி திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டால் போதுமானது . அதனை தொடர்ந்து பிரஸ்தாப நிலப்பயன் மாற்றம் விரிவு அபிவிருத்தி திட்டத்தில் பெறப்பட வேண்டும் என நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தற்போது நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்கள் கடிதம் ந.க.எண்.4720/2021/ஈமா2 நாள்.01.11.2021 இல் இந்நகராட்சி தீர்மான எண்.92 நாள்.10.09.2020 மற்றும் நகர்மன்றத்தீர்மான எண்.163 நாள்.23.12.2020 க்கு மாற்றாக கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 இல் திட்ட மாற்றம் செய்வது குறித்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது. இதனையடுத்து இவ்வலுவலக கடிதம் 1886/2020/எப்1 நாள்.03.12.2021 இல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் நகர்

ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்கள் கடிதம் ந.க.எண்.5326/2021/ஈ.மா.2 நாள்.05.01.2022 இல் 3.85 ஏக்கர் பரப்பு கொண்ட மனையிடமானது ஒப்புதல் பெற்ற கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 இன் படி உள்ள விவசாய பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கு திட்ட மாற்றம் செய்ய மனுதாரர் திரு.V.K. குமரேசன் மற்றும் 3 பேர் என தற்போது விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்றும் ஆனால் ஏற்கனவே திரு. V.K.குமரேசன் , திரு.P,குமார், திரு.V.P.தேவராஜ் மற்றும் திரு.K.M.ரத்னசாமி என நான்கு பேர் பெயர்கள் இடம் பெற்று விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மேலும், நகர்மன்றத்தீர்மான 213 நாள்.30.11.2021 இல் மனுதாரர்கள் V.K.குமரேசன் மற்றும் 4 பேர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளதாலும், நகர்மன்ற தீர்மானம் பெறப்பட்டத்திற்கு பின்னர் பாகபாத்திய விடுதலை பத்திரம் எண்.4358/21 நாள்.02.12.2021 இல் மேற்படி மனுதாரர்களில் ஒருவரான திருமதி.தமிழரசி என்பவர் கிரைய ஆவண எண்.812/20250 நாள்.15.03.2020 இலிருந்து சொந்த காரணங்களுக்காக விடுதலை அளித்துள்ளதால் திருமதி.தமிழரசி அவர்களின் பெயரை நீக்கம் செய்து திருத்திய நகர்மன்ற தீர்மானம் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது. இதனை தொடர்ந்து நகர்மன்றத்தீர்மான எண்.290 நாள்.25.01.2022 இல் திரு. குமரேசன் மற்றும் 3 நபர்கள் மட்டுமே விண்ணப்பதாரர்கள் என திருத்தம் செய்து அதன் நகலுடன் நகர்ஊரமைப்பு துணை இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1886/2020/எப்1 நாள்.31.01.2022 இல் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிலையில் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்11543/2022/டிசிபி3 நாள்.23.06.2022 இல் மேற்படி உத்தேசம் அங்கீகரிக்கப்பட்ட கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 இன் படி விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகமாக நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 33(1) இன் கீழ் தனி நபர் திட்ட மாற்றம் செய்ய அனுமதித்து பரிந்துரைக்கப்படுகிறது என்ற பரிந்துரையுடன் திருத்திய தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1886/2020/எப்1)

**அலுவலக குறிப்பு :-** நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்11543/2022/டிசிபி3நாள்.23.06.2022 இல் தெரிவித்ததற்கிணங்க மேற்படி உத்தேசம் அங்கீகரிக்கப்பட்ட கோபிசெட்டிபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 இன் படியும் நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 33(1) இன் கீழ் தனியார்கள் திரு.குமரேசன் மற்றும் மூன்று நபர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட வீரபாண்டி கிராமம், வார்டுD. பிளாக்–20, நகரளவை எண்கள் 9/1, 9/2, 10/1, 2, 23, 24 1/2, 25/1 மற்றும் 25/2 சர்வே க.ச.எண்கள் 244பி, 247/1 மற்றும் 247/3 இவைகளுக்கு உட்பட்ட மேற்படி தனியார் நபர்கள் நான்கு பேர்களுக்கு மட்டும் பாத்தியப்பட்ட 3.85 ஏக்கர் நிலத்தினை மட்டும் விவசாய உபயோக பயன்பாட்டிலிருந்து குடியிருப்பு உபயோக பயன்பாட்டுக்கு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 –ல் தெரிவித்துள்ள முழுமைத்திட்ட விதிகளின் படியும் 1998 – ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு இன்று வரை இன்னும் இந்நகராட்சியில் நடைமுறையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட முழுமைத்திட்ட விதிகளின் படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்திய முழுமைத்திட்டம் (Modified Master Plan) தயார் செய்யப்படாமல் உள்ள மேற்படி முழுமைத்திட்டத்திலும் மேற்படி தனியார் நபர்கள் நான்கு பேருக்கு மட்டும் பாத்தியப்பட்ட 3.85 ஏக்கர் (385 சென்ட்) விவசாய உபயோக பகுதியாக உள்ளதை மட்டும் குடியிருப்பு உபயோக பகுதியாக முதலில் மாற்றம் செய்யவும், அதற்கு தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு துறை அரசு செயலாளருக்கு மட்டுமே உரிய அதிகாரம் உள்ளது. எனவே முதலில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு அவர்கள் வாயிலாக நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்கள் வாயிலாகவும் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற

மேம்பாட்டு துறை அரசு செயலாளர் அவர்களுக்கு முழுமைத்திட்டத்தில் மேற்படி மாற்றம் செய்து அரசு ஆணை வெளியிடக் கோரி மன்றத்தின் பரிந்துரையுடன் அனுமதி வழங்க பரிந்துரைக்கப்படுகிறது.

**அனுமதி வழங்கப்பட்டது, மன்றத்தீர்மான எண். 206**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான நகரவை நடுநிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள (Ward –B,Block –9,T.S.No.253) பழைய பழுதடைந்த கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தி எடுத்துக்கொள்ளும் பணிக்கு 12.07.2022 செவ்வாய்கிழமை அன்று பொது ஏலம் கோரப்பட்டத்தில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகை ரூ.1,40,000/– ( ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) திரு.முகமது ரஃபீக் கோபிசெட்டிபாளையம் என்பவர் கோரியுள்ளார். மேற்படி ஏலத்தினை இறுதி செய்திட மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.897/2022/இ1)

**அலுவலக குறிப்பு:**

1. பள்ளி மாணவ மாணவியர் பாதுகாப்பு நலன் கருதி பழுதடைந்த கட்டிடங்களை உடன் அகற்றிட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி ரூ.1,40,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) கோரிய திரு.முகமது ரஃபீக் கோபிசெட்டிபாளையம் என்பவரது ஏலத்தினை அங்கீகரிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**1) அங்கீகரிக்கப்பட்டது 2) அங்கீகரிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண். 207**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு வெளிமுகமை (Out Sourcing) முறையில் ஒப்பந்த அடிப்படையில் 138 துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்வளின் கடிதம் ந.க.எண். 20489/பி3/2018 நாள். 09.08.2018 மற்றும் ந.க.எண். 28369/J3 நாள். 04.12.2018 இல் முன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் 138 பணியாளர்களை கொண்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்த காலம் வரும் 31.08.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் அரசாணை எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA3) துறை நாள். 30.04.1997 இல் தெரிவித்துள்ளபடி நகராட்சிகளில் நடைபெறும் திடக்கழிவு மேலாண்மை பணி மற்றும் பொதுசுகாதாரப் பணிகளுக்கு தேவைப்படும் துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) வெளிகொணர்வு முறையில் பணியமர்த்திக்கொள்ள உரிய கருத்துருவினை அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்காணும் அரசாணையின் படி கீழ்கண்டவாறு பணியிடங்களின் விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | அரசாணை 101 இன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | – | 254 |
| 2. | அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் பணியிடங்கள் | – | 174 |
| 3. | தற்போது பணி புரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | – | 89 |
| 4. | காலியாக உள்ள பணியிடங்கள் (இன்றைய தேதியில்) | – | 85 |

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் வெளிகொணர்வு முறையில் (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு தற்போது 122 தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு வார்டு எண். 3,4,5,7,9,10,11,12,13,14,15,21,23,24,25,28,29,30 மற்றும் தினசரி சந்தை ஆகிய பகுதிகளில் முதல் நிலை குப்பை சேகரம் செய்தல், கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்தல், தெரு கூட்டுதல், பொது கழிப்பிடம் சுத்தம் செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு

வருகிறது. மேலும், தற்பொழுது இந்நகராட்சியில் 85 தூய்மைப் பணியாளர் பணியிடங்கள் காலியாக உள்ள நிலையில் 01.09.2022 முதல் மூன்று ஆண்டுகளுக்கு 165 தூய்மைப் பணியாளர்களை வெளிமுகமை முறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்துக் கொள்ள வேண்டியுள்ளது. தேவைப்படும் பணியாளர்களின் விவரம் கீழ்கண்டவாறு குறிப்படிப்பட்டுள்ளது.

| பணிகள் விபரம் | தேவையான பணியாளர்கள் |
|---|---|
| வார்டு எண். 3,4,5,7,9,10,11,12,13,14,15,21,23,24,25,28,29,30 மற்றும் தினசரி சந்தை ஆகிய பகுதிகளில் முதல் நிலை சேகரம் செய்யும் பணி, தெரு கூட்டுதல், கழிவு நீர் கால்வாய் சுத்தம் செய்யும் பணிக்கு | 129 |
| 4 வாகனங்கள், 2 நுண் உரக்கூடங்கள், 1 வள மீட்பு மையம் மற்றும் 1 உயிரி எரிவாயு கூடம் போன்றவற்றில் பணி மேற்கொள்ள | 29 |
| பேருந்து நிலைய தூய்மைப் பணிகள் மேற்கொள்ளவும், பேருந்து நிலைய சிறுநீர், பொது கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல், வணிக வளாக கழிப்பிடம் மற்றும் தூய்மைப் பணிகள் மேற்கொள்ள. | 7 |
| **மொத்தம்** | **165** |

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செயல்முறை உத்தரவு ந.க.எண். 10200/2021/எ2 நாள். 07.10.2021 இல் 2021 – 2022 ஆம் ஆண்டிற்கு தூய்மைப் பணியாளர்களுக்கான நாள் ஊதியம் ரூ. 578/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 165 பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் பிற செலவினங்கள் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

Rs.578 x 312 Days x 165 No's

| | | |
|---|---|---|
| Rs.578 x 312 Days x 165 Nos (Except Sunday) | = | 297,55,440 |
| EPF 13 % | = | 38,68,207 |
| ESI 3.25 % | = | 9,67,052 |
| Admin Cost 5 % | = | 14,87,772 |
| Accident Policy Rs.1000 x165 | = | 1,65,000 |
| Sanitary Material 1500 x 165 | = | 2,47,500 |
| Uniform & Safety Equipments 2500 x 165 | = | 4,12,500 |
| Unfortune Expenses | = | 50,000 |
| **TOTAL** | | **3,69,53,471** |
| **Round Off** | | **369.54 lakhs** |

எனவே, விரிவடைந்து வரும் நகரின் வளர்ச்சி, பெருகிவரும் மக்கள் தொகை, தினசரி சேகரமாகும் குப்பைகளின் அளவு கூடுதலாகிக் கொண்டு வருவதாலும், பொது சுகாதாரப்பிரிவில் பல்வேறு பணிகள் (MCC, RRC and Bio – Gas Plant) மேற்கொண்டு வருவதாலும் இந்நகராட்சிக்கு 165 பணியாளர்கள் அவசியமாக தேவைப்படுகிறது. எனவே, மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில் 165 பணியாளர்களை வெளிக்கொணர்வு முறையில் (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 369.54 லட்சத்திற்கு அனுமதியும் Out Sourcing முறையில் 165 தூய்மைப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்க கருத்துரு அனுப்பவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 1609/2022/எச்1)**

**அலுவலகக் குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களுக்கு கருத்துரு அனுப்பியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அங்கீகரிக்கப்பட்டது ,மன்றத்தீர்மான எண். 208**

13. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு **21.07.2022** தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம் | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண். 20. பெரியார் வீதி மற்றும் வார்டு எண்.29 சங்கரன் வீதியில் பழுதடைந்த (HDPE Tank பதிலாக)1000 lit கொள்ளளவு புதுப்பித்தல் | 20,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.25 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.23 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் 30 வார்டுகளிலும் உள்ள ஆழ்துளை கிணறு கைபம்பினை 2022 –23 ஆம் ஆண்டுக்கு தனியார் சேவை பயன்படுத்தி பராமரிப்பு செய்தல் | 50,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.25 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.56 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் சுலிஸ் வால்வு தொட்டி மற்றும் மூடுகற்கள் (Slab) புதிதாக அமைக்கும் பணி | 2,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.25 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.22 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு 18 , வார்டு 15 மற்றும் வார்டு 26 ல் சிறுமின் விசை பம்புகள் பழுதடைந்த (HDPE Tank க்கு) பதிலாக புதியதாக அமைத்து தண்ணீர் வசதி செய்தல் | 50,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.25 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.68 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 5. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு 26, 25, 18 மற்றும் 17 பகுதியில் உள்ள சிறுமின்விசை பம்பு இரும்பு மீட்டர் அறைகள் மாற்றி அமைத்தல் பணி | 2,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.26 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.34 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு 28 (Urban Health and wellness center முன்புறம் ) முத்து நகரில் சிறுபாலம் அமைத்தல் | 1,20,000 | **M/s.எஸ்.பீ.டி இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.28 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு. |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.35 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

அ) 1. மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

2 வ.எண்.2–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

3 வ.எண்.3–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள **M/s. சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்

4 வ.எண்.4க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் **M/s. சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

5 வ.எண்.5க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள**M/s.சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

6 வ.எண்.6க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் **M/s.எஸ்.பீ.டி.இன்ஜினியரிங் கான்ட்ரேக்டர்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**வரிசை எண்.1,2,3,4,5 மற்றும் 6 அங்கீகரிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.209**

14. இந்நகராட்சி நகர்மன்ற தலைவர், நகர்மன்ற துணைத்தலைவர், 28 நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலகத்தில் புதிதாக நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் மூவர் ஆகியோர்களுக்கு, 22 GSM சிந்தடிக் Water Proof பிளாஸ்டிக் அட்டையுடன் மெட்டல் கிளிப் மற்றும் Nylon Printed Rope ஒரு செட் ரோலுடன் கூடிய அடையாள அட்டைகள் (Identity Card) தயார் செய்து வழங்கிடும் பணிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, திரு.C.L.சண்முகம் M/s சன் ஸ்டுடியோ நம்பியூர் நிறுவனத்தாரிடம் செய்து, மேற்படி அடையாள அட்டைகளை பெறப்பட்டமைக்கான செலவினத் தொகை ரூ.21,820/– ஐ திரு.C.L. சண்முகம் M/s. சன் ஸ்டுடியோ நிறுவனத்தாருக்கு வழங்கியமைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.210**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சி 2021–2022ம் நிதியாண்டு பொது நிதி, குடிநீர் நிதி, கல்வி நிதி ஆகிய கணக்குகள் வாரியாக தயார் செய்து தணிக்கைக்கு முன்னிலைப்படுத்த தனியார் கணக்கு ஆலோசகர் (Account Consultant) மூலம் பணிகள் மேற்கொண்டு முடித்து கொடுக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.100000/– மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண்.2273/2020/பி1)

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.211**

16. இந்நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற காலஞ்சென்ற மற்றும் தற்பொழுது பணியாற்றி வரும் அலுவலர்கள் பணியாளர்களின் சேமநலநிதித் தொகைக்கான வட்டித்தொகையினை கணக்கிட்டு வழங்க ஆகும் செலவினங்களுக்கு மன்றத் தீர்மானம் எண்.132 நாள்.30.05.2022 இல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு விலைப்புள்ளி 15.06.2022 அன்று கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | SANJAY SOLUTIONS<br>No.14H AVR Line<br>South Colony<br>Komarapalayam | : 2,97,220 |
| 2 | Ram SOLUTIONS<br>No.55/15th East Street<br>Kamaraj Nagar<br>Thiruvanmaiyur,Chennai - 41 | : 3,22,856 |
| 3 | OZONE Technologies<br>15 (Old No)Lake View Road<br>Kottur, Chennai – 85. | : 3,13,500 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் ரூ.2,97,220/- அளித்துள்ள வரிசை எண்.1 இல் குறிப்பிட்டுள்ள நிறுவனமான SANJAY SOLUTIONS, No.14H AVR Line,South Colony, Komarapalayam அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக் குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.212**

17. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் புகை தெளிப்பான் இயந்திரங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 22.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் டன் ஒன்றுக்கு (ரூ.) |
|---|---|---|
| 1 | M/s. Om Sakthi Tech Services,<br>No. 115, Nandha Midas City,<br>Athur Village, Chengalpattu – 603101 | ரூ. 24,600/- |
| 2 | M/s. Sri Agasthiyar Tech Services,<br>2/243, Asari Medu,<br>Sathy Main Road,<br>Gobichettipalayam – 638453 | ரூ. 25,100/- |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1 இல் குறிப்பிடப்பட்டுளள் M/s. Om Sakthi Tech Services,No. 115, Nandha Midas City, Athur Village, Chengalpattu – 603101 அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமானது மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண். 1565/2022/எச் 1).

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம் மற்றும் இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.213**

18. இந்நகராட்சியின் கரட்டூரில் உள்ள மக்கும் குப்பைகளை அரைத்து உரம் தயார் செய்யும் நுண் உரக்கூடத்தில் (Micro Composting Centre) கழிவுகளை துகள்களாக அரைக்கும் இயந்திரத்தில் உள்ள Shredding Machine இல் சுழலும் சக்கரமும் அதில் பொருத்தப்பட்டுள்ள பிளேடுகள் 6 எண்ணிக்கையும் முழுவதும் தேய்ந்து உள்ளது. எனவே, மேற்படி அரைக்கும் இயந்திரத்திற்கு புதியதாக 750 mm dia, 16 mm Thickness, Shatt dia 70 mm மற்றும் 450 mm நீளமும் கொண்ட சுழலும் சக்கரம் (Wheel) 1 புதியதாகவும், அச்சக்கரத்தில் 12 mm Thickness, 120 width மற்றும் 300 mm நீளமும் கொண்ட சுழலும் பிளேடுகள் 6 எண்ணிக்கையும் மற்றும் அதற்கான போல்ட் நட்டுகள் புதியதாக கொள்முதல் செய்து பொருத்திக் கொள்ளவும், இயந்திரத்தை சர்வீஸ் செய்து கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 50,000/– ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண்**.834/2022/எச் 1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.214**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான நாய்க்கன்காடு சத்துணவு மையம் மற்றும் நகராட்சி நடுநிலைப்பள்ளி (டவுன்) ஆகியவற்றினை ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) 23.06.2022 பிற்பகல் 04.00 மணியளவில் நேராய்வு செய்யப்பட்டது. மேற்படி நேராய்வில் கீழ்காணும் விபரப்படியான பழுதுகளை உடன் நீக்கம் செய்து மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களுக்கு அறிக்கை சமர்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

| வ. எண் | சத்துணவு மையத்தின் பெயர் | பழுதுகள் உள்ள விபரம் | பழுதுகள் நீக்கம் செய்து முடிக்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|
| 1. | நகராட்சி ஆரம்பப்பள்ளி, நாய்க்கன்காடு | 1.சத்துணவு மையத்தில் மேற்கூரைப்பகுதியின் கீழ்புறத்தில் சிறிய அளவில் இடிந்து கான்கிரீட் கம்பிகள் தெரியும் வகையில் உள்ளது.<br><br>2. சத்துணவு மையத்தின் சமையலறை புகைபோக்கி முற்றிலும் பழுதடைந்துள்ளது.<br><br>3.மேற்படி சத்துணவு மையத்தின் எதிரில் உள்ள பள்ளிக்கட்டிடத்தின் ஒரு அறையில் மேற்கூரை சிமெண்ட் சீட் சிறிய அளவில் பழுதடைந்துள்ளது மற்றும் ஜன்னல் கதவுகள் சரி செய்யப்பட வேண்டும். | 10 நாட்களுக்குள் |
| 2. | நகராட்சி நடுநிலைப்பள்ளி (டவுன்) | இப்பள்ளியில் உள்ள சத்துணவு மையமானது பெரிதும் பழுதடைந்துள்ளது. இதனை முற்றிலும் சரி செய்யப்பட வேண்டும். | தேவையான கால அளவு |

மேற்கண்ட விபரப்படியான சத்துணவு மையங்களின் பழுதுகளை சரி செய்திட செலவினம் ரூ. 3,00,000/– ஆகும். மேற்கண்ட பணிகளை அவசியம் கருதி மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :– மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.215**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் IUDM (2020-2021) திட்டத்தின் கீழ் ரூ.699.78 இலட்சம் மதிப்பீட்டில் தினசரி அங்காடி கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி பணியில் அடிமட்டம் தோண்டி பணியினை மேற்கொள்ளும் போது தண்ணீர் ஊற்று ஊறிக்கொண்டே இருந்ததால் மேற்படி தண்ணீரை மோட்டார் மூலம் இறைத்து அகற்றிவிட்டு (Dewatering) பணி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. பணிக்களத்தின் தன்மை காரணமாக இப்பணி அத்தியாவசியமாகிறது. மேலும் மண்டல செயற்பொறியாளர் அவர்களின் நேரடி ஆய்வில் தண்ணீர் ஊற்று காரணமாக தடுப்பு சுவர் (Retaining wall) பலமாக அமைத்திட அறிவுறுத்தியுள்ளார்கள் .எனவே தண்ணீர் வெளியேற்றுவது மற்றும் தடுப்பு சுவர் அமைத்தல் ஆகிய பணிகளை அவசியம் கருதி செய்திடவும் , இதற்காகும் செலவினத்தை மதிப்பீட்டு செலவினத்திற்குள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.216**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022 –23 இன் கீழ் அறிவுசார்மையம் (Knowledge Center) கட்டும் பணியினை ரூ.194.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசாணை GO (MS) எண்.88 நாள்.17.06.2022 –ல் நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (என். எஸ் ) துறை இல் மேற்படி அறிவுசார்மையம் கட்டும் பணியினை KNMT 2022–2023 –ன் கீழ் செயல்படுத்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு 15.07.2022 –ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1 | M/s QUN INTERIORS PVT LTD, CHENNAI.<br>ஒப்பந்ததாரர் |
| 2 | M/s. NEPTUNE AUTOMATION, ERODE<br>ஒப்பந்ததாரர் |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றிருந்ததால் உரிய அறிவிப்பு அனுப்பப்பட்டு 21.07.2022 ல் விலை விவரங்கள் அடங்கிய உறை திறக்கப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு விலை விகிதம் அளித்துள்ளார்கள்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | M/s QUN INTERIORS PVT LTD, CHENNAI.<br>ஒப்பந்ததாரர் | **7.59 %**<br>மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட அதிகம்<br>**(ரூ. 19430001.03)** |
| 2 | M/s. NEPTUNE AUTOMATION, ERODE<br>ஒப்பந்ததாரர் | **14.46 %**<br>மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட அதிகம்<br>**(ரூ. 20669989.34 )** |

மேற்படி பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 7.59 சதவீதம் அதிகம் வழங்கியுள்ள M/s.QUN INTERIORS PVT LTD, CHENNAI அவர்களிடம் விலை குறைப்பு செய்து ஒப்பந்தப்புள்ளி அளித்திட கோரப்பட்டதில் மேற்படி ஒப்பந்ததாரர் M/s QUN INTERIORS PVT LTD, CHENNAI அவர்கள் வேலையாட்கள் கட்டுமான பொருட்கள் விலை ,டீசல் விலை மற்றும் லாரி வாடகை ஆகியவை அதிகமாக உள்ளதால் கீழ்கண்டுள்ளவாறு விலை குறைப்பு செய்து ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர் .

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | விலை குறைப்பு செய்து அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/s QUN INTERIORS PVT LTD, CHENNAI.<br>ஒப்பந்ததாரர் | **7.59 %**<br>மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட அதிகம்<br>(ரூ. **19430001.03**) | **4.98 %**<br>மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட அதிகம்<br>**(ரூ. 18957652.85)** |

M/s QUN INTERIORS PVT LTD, CHENNAI அவர்களின் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு (4.98 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகம்) செய்து அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. பணியின் முக்கியத்துவம் மற்றும் அவசர அவசியம் கருதி M/s QUN INTERIORS PVT LTD, CHENNAI , அவர்களால் வழங்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 4.98 சதவீதம் அதிகம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மதிப்பீட்டினை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**1) M/S QUN INTERIORS PVT LTD அவங்களால் வழங்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தினை (கலம் 4) விலை குறைப்பு செய்து அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் (ரூ.1,89,57,652.85) ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
**2) அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.217**

22. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு 15.07.2022 ஆம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. நகராட்சி பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
2. நகராட்சி தலைமை குடிநீர் நிலைய மரங்களின் பலன்களை அனுபவிக்கும் உரிமம்.

மேற்கண்ட ஆண்டு குத்தகை இனங்களுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. நகராட்சி பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | ஆண்டு குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட ஆண்டு குத்தகை தொகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | | [5] |
| 1 | நகராட்சி பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | திரு.வி.மாரியப்பன் 11ஏ, சிவசுப்ரமணியன் லேவுட், தெய்வசிகாமணி பட்டணம், உடுமலைப்பேட்டை | **ரூ.4,00,100/-** **குத்தகை தொகை ரூ.1,45,650/-** **பணியாளர் சம்பளம் ரூ. 2,54,450/-** **மொத்தம் ரூ.4,00,100/-** | இல்லை |
| | | திருமதி.எம்.பார்வதி 8/2ஏ, நாச்சம்மாள் லேவுட், டி.வி.பட்டணம், உடுமலைப்பேட்டை 642126 | ரூ.3,65,500/- **குத்தகை தொகை ரூ.1,11,050/-** **பணியாளர் சம்பளம் ரூ.2,54,450** **மொத்தம் ரூ.3.65.500/-** | |

மேற்கண்ட விபரப்படி வரிசை எண்.1ல் கண்டுள்ள ஆண்டு குத்தகை இனமான நகராட்சி பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு **முதல் ஆண்டுக்கு பணியாளர் சம்பளம் ரூ.2,54,450 அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு 10 சதவீதம் சேர்த்து செலுத்தப்படவேண்டும்.**

அதன்படி திரு.வி.மாரியப்பன் என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,00,100/- ல் பணியாளர் சம்பளம் ரூ.2,54,450/- கழித்தது போக ரூ.1,45,650/- குத்தகை தொகையாக உள்ளது.

திருமதி.எம்.பார்வதி என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.3,65,500/- ல் பணியாளர் சம்பளம் ரூ.2,54,450/- கழித்தது போக ரூ.1,11,050/- குத்தகை தொகையாக உள்ளது.

மேற்கண்ட விபரங்களின் படி திருமதி.எம்.பார்வதி என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,11,050/-ஐ (பணியாளர் சம்பளம் கழித்தது போக) விட கூடுதலாக ரூ.34,600/- சேர்த்து, திரு.வி.மாரியப்பன் என்பவர் ரூ1,45,650/- க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

மேற்படி திரு.வி.மாரியப்பன் என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.145,650/-, சென்ற 2020-2021 ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.4,31,010 /- (பணியாளர் சம்பளம் நீங்கலாக) ஐ விட ரூ.2,85,360/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரி குத்தகை தொகை ரூ.4,90,948/- (பணியாளர் சம்பளம் நீங்கலாக) ரூ.3,45,298/- குறைவாகவும் உள்ளது. மேலும் கடந்த 2021- 2022 ஆம் ஆண்டில் 15.07.2021 முதல் 31.03.2022 முடிய துறை ரீதியாக வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.6,31,348/- ஆகும். இந்த குத்தகை இனத்திற்கு இதுவரை 11 முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஒருவரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளவில்லை.

வருவாய் ஆய்வர் தனது 23.07.2022 ஆம் தேதிய குறிப்பில் மேற்படி குத்தகை இனத்திற்கு திரு.வி.மாரியப்பன் என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,00,100/-, சென்ற ஆண்டு குத்தகை தொகை மற்றும் பணியாளர் சம்பளம், தொழில் வரி, வருமான வரி மொத்தமாக சேர்த்து ரூ.6,33,537/- க்கு குறைவாகவும், மூன்றாண்டு சராசரி குத்தகை தொகை மற்றும் பணியாளர் சம்பளம், தொழில் வரி, வருமான வரி மொத்தமாக சேர்த்து ரூ.7,42,949/- ஐ விட குறைவாகவும் உள்ளது. இவ்வினத்திற்கு பல முறை ஏலம் கோரியும் ஏலம் போகாததால் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வருவதில் 05.07.2021 முதல் 31.07.2022 ஒரு மாதத்திற்கு சராசரியாக ரூ.75,600/- வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ்வினத்திற்கு ஆண்டு குத்தகையாக துறை மூலம் வசூல் செய்வதால் ஆண்டு சராசரி குத்தகை தொகை மற்றும் பணியாளர் சம்பளம் சேர்த்து ரூ. 8,89,934/- வசூல் ஆகும்.

இவ்வினத்திற்கு ஒரு வருடத்திற்கு வசூல் செய்வதற்கு நகராட்சி பணியாளர் செலவினத்திற்கு ரூ.5,04,000/- ம், வருமான வரி மற்றும் டிக்கட் புக் செலவினமாக ரூ.50,000/- சேர்த்து ரூ.5,54,400/- செலவு ஏற்படுகிறது. மேற்படி துறை மூலம் வசூல் செய்யப்படும் மொத்த சராசரி குத்தகை தொகை ரூ.9,07,200/-நிர்வாக செலவினங்கள், பணியாளர் செலவினம் மற்றும் இதர செலவினங்களை சேர்த்து

மொத்தம் ரூ.5,54,400/– நகராட்சி நிகர குத்தகை தொகை மற்றும் பணியாளர் சம்பளம் சேர்த்து ரூ.3,35,934/– உரிமத்தொகையாக உள்ளது. எனவே மேற்படி வி.மாரியப்பன் என்பவர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,00,100/– ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி பெற்று வழங்கலாம் என வருவாய் ஆய்வர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

எனவே மேற்படி குத்தகை இனம் துறை மூலம் வசூல் செய்யப்படுவதால், பணியாளர் பற்றாக்குறை மற்றும் பணியாளர் ஊதியம் போன்றவற்றினால் நிதியிழப்பு ஏற்படுகிறது. எனவே நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுவதினை கருத்தில் கொண்டு பதிமூன்றாவது முறையாக 15.07.2022 ந் தேதியில் நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், திரு.வி.மாரியப்பன் என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4,00,100/– ஐ ( குத்தகை தொகை ரூ.1,45,650 மற்றும் பணியாளர் சம்பளம் ரூ.2,54,450) ஏற்றுக்கொண்டு, நகராட்சி பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்ய மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 1220/2021/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் முடிவு செய்யலாம்.

1) **வரிசை எண்.1, கலம் 2–ன் குத்தகை இனத்திற்கு (பதிமூன்றுமுறை நடைபெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி) நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படுவதை சரி செய்ய வி.மாரியப்பன் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டது.**
2) **ஏலம் போகாத இனத்திற்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.218**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் வார்டு எண்.18, பஜனைக்கோவில் வீதியிலுள்ள சமுதாய கழிப்பறைகள் Septic tank மிகவும் மோசமான நிலையில் உள்ளது மற்றும் கழிப்பறைக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது,

மேற்படி பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ,4,00,000./ (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்திற்கு பொருள் வைக்கவும் அனுமதிக்கு உத்திரவிற்காக . (ந.க.எண்.1632/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.219**

24. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021–22 ல் இந்நகராட்சிக்குட்பட்ட 13 வார்டுகளுக்கு மட்டும் திருமிகு சட்டமன்ற உறுப்பினர் கோபிசெட்டிபாளையம் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கீடு செய்யப்படாத ஏனைய 17 வார்டுகளிலும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022–2023 நிதியாண்டில் இந்நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்ய கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களை கேட்டுக்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.1640/2022/இ1)

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.220**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி